807, அண்ணா சாலை, சென்னை – 2.

ந.க.எண். 19845/2004எல்ஏ2 நாள்: 29.07.2004.

2632
கோவை-18.

**சுற்றறிக்கை**

பொருள்: நகர் –ஊரமைப்பு – மனைப்பிரிவு ஒப்புதல் – ஊராட்சி பகுதிகள் – அதிகார பகிர்வு – ஆணையிடப்படுகிறது–குறித்து.

பார்வை:
1) அரசாணை எண். 134 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.9.2002.
2) அரசாணை எண். 71 ஊரக வளர்ச்சித்துறை நாள் 16.6.2003.
3) அரசு கடிதம் எண். 38800/சி2/2003–1 ஊராக வளர்ச்சித்துறை நாள் 17.12.2003.
4) இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். 8630/2001எல்ஏ1 நாள் 30.9.2002.
5) தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997.

---

பார்வை (1)ல் கண்ட அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் 5 ஏக்கர் வரை மனைப்பிரிவு ஒப்புதலுக்கு மண்டல துணை இயக்குநர் மற்றும் திட்டக் குழும உறுப்பினர் செயலருக்கு அதிகாரப்பகிர்வு ஆணை அளிக்கப்பட்டது. பார்வை (4) ல் கண்ட உத்தரவில் நடைமுறைகள் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக ஊராட்சிப்பகுதிகளில் இருந்து பெறப்படும் மனைப்பிரிவுகள் குறித்து பார்வை (2)ல் கண்ட அரசாணையில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊராட்சிகளில் இருந்து பெறப்படும் மனைப்பிரிவு விண்ணப்பங்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் நடைமுறையை எளிதாக்கும் நோக்குடனும் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 விதி எண்.3–ன் கீழ் நகர் ஊரமைப்பு ஆணையரால் கீழ்கண்டவாறு அதிகாரப்பகிர்வு அளிக்கப்படுகிறது.

1) கூட்டு உள்ளூர் திட்டப்பகுதி மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டப்பகுதிக்குட்பட்ட உள்ளாட்சிகளில் 5 ஏக்கர் பரப்பு வரை மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க சம்பந்தப்பட்ட உறுப்பினர் செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

2) ஏனைய அனைத்து ஊராட்சிப்பகுதிகளிலும் 5 ஏக்கர் பரப்பு வரை சம்பந்தப்பட்ட மண்டல துணை இயக்குநருக்கு மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3) பார்வை (2)ல் கண்ட அரசாணையின்படி விபரங்கள் பெற்று மனைப்பிரிவு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

4) முழுமைத்திட்ட விதிகள், விரிவு அபிவிருத்தித் திட்ட விதிகள், ஊராட்சி கட்டிட விதிகள், இத்துறையால் பின்பற்றப்படும் நெறிமுறைகள் மற்றும் அப்பகுதிகளில் அமுலில் உள்ள சிறப்பு விதிகள் தேவையை நிறைவு செய்வதை உறுதி செய்து கொண்டு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

5) மலையிட பாதுகாப்புப் பகுதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், SIPCOT நிறுவன மனைப்பிரிவுகட்கு நகர் ஊரமைப்பு ஆணையரின் ஒப்புதல் பெறப்படவேண்டும்.

6) பார்வை (1)ல் சுட்டிய அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலக்கெடு மற்றும் நடைமுறைகள் இம்மனைப் பிரிவுகட்கும் பொருந்தும்.

7) இவ்வாணை உடன் அமுலுக்கு வருகிறது.

அதிகார பகிர்வு விபரம் அனைத்து உள்ளாட்சிகள், மற்றும் சம்பந்தப்பட்ட துறைகட்கு மண்டல துணை இயக்குநர்/உறுப்பினர் செயலரால் தெரிவிக்க வேண்டும்.

இச்சுற்றறிக்கை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் சான்று உடன் அனுப்பத் தெரிவிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு ஆணையருக்காக.

பெறுநர்
மண்டல துணை இயக்குநர்,
அனைத்து மண்டல அலுவலகங்கள்.
உறுப்பினர் செயலர்/உள்ளூர் திட்டக்குழுமம்/புதுநகர் வளர்ச்சிக்குழுமம்.

நகர் ஊரமைப்பு ஆணையர், தலைமை அலுவலகம்.
இணை இயக்குநர், தலைமை அலுவலகம்,
துணை இயக்குநர்கள், தலைமை அலுவலகம்,
துணை இயக்குநர்(நிர்வாகம்), தலைமை அலுவலகம்.

நகல் 1) அரசுச் செயலர், ஊரக வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.
2) அரசுச் செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9
3) வீட்டுவசதித் துறை அமைச்சரின் முதுநிலை தனி உதவியாளர்.
4) இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை., சென்னை.
5) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.